**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55 of 2022**

Prosecution witness LW18 (PW12) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 10.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி . சவிதா | Husband's Name | : | திரு.கலையரசு |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது நாமக்கல் மாவட்டம் குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.10.2021 ம் தேதி பர்கூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபொழுது இரவு சுமார் 11.00 மணியளவில் கந்திகுப்பம் காவல் நிலையம் காவல் உதவி ஆய்வாளர் திரு. சிவக்குமார் அவர்கள் என்னை போனில் தொடர்புக்கொண்டு ஒரப்பம் கிராம நிர்வாக அலுவலர் திரு. செல்வம் அவர்கள் கொடுத்த புகாரின்பேரில் கந்திகுப்பம் காவல் நிலைய குற்ற எண். 325/2021 சட்டபிரிவுகள் 174 Crpc (suspicious Death) ஆக வழக்கு பதிவு செய்துள்ளதாக தகவல் சொன்னார் . காவல் உதவி ஆய்வாளரின் தகவலின்பேரில் 28.10.2021 ம் தேதி காலை 1.00 மணிக்கு கந்திகுப்பம் காவல் நிலையம் வந்தேன் . காவல் உதவி ஆய்வாளர் மேற்படி வழக்கில் முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் புகாரின் நகலினை என்னிடம் ஆஜர்ப்படுத்தினார்.

நான் அதனை பார்வையிட்டு எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 28.10.2021 தேதி அதிகாலை 1.15 மணிக்கு சம்பவயிடம் சென்றேன். சம்பவயிடத்தில் இரவு நேரத்தில் துல்லியமாக பார்க்க போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால் சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் அந்த நேரத்தில் தயார் செய்யவில்லை . அந்த நேரத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை . பின்னர் புறப்பட்டு இவ்வழக்கில் இறந்துபோன ரசீதின் பிரேதம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை அறையில் இருந்ததால் அங்கு சென்று கந்திகுப்பம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு . ஆஞ்சிநேயர் என்பவரை பிரேதத்தை பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்புக்கு நியமித்தேன். பின்னர் 28.10.2021 ம் தேதி காலை 6.30 மணிக்கு மேற்படி வழக்கின் சம்பவயிடமான சின்ன ஒரப்பம் கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் என்பவரின் விவசாய கிணற்றிடம் சென்று காவலர்களுடன் சென்றேன் . தகவலின்பேரில் ஆஜரில் இருந்த ஒரப்பம் கிராம நிர்வாக அலுவலர் திரு . செல்வம் , கிராம உதவியாளர் திரு. முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் மேற்படி சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அடையாளம் காட்ட காலை 6.45 மணிக்கு ஒரு மாதிரி வரைப்படம் தயார் செய்தேன் . அந்த மாதிரி வரைப்படம் **Ex.P.18** ஆகும்.

பின்னர் காலை 07.15 மணிக்கு சம்பவ கிணறு மற்றும் அதன் சுற்றுபுறங்களை பார்வையிட்டு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் மேற்படி

சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் 07.45 மணிக்கு சம்பவ கிணற்றில் இருந்து மாதிரிக்கும் , இரசாயன பரிசோதனைக்கும் தலா 360 ML பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பாட்டிலில் தலா 350 ML கொண்ட தண்ணீர் எடுத்து SHO Seal வைத்து மகஜர் தயார் செய்து , மகஜரில் மேற்படி சாட்சிகள் செல்வம் மற்றும் முருகன் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றேன்.

இவ்வழக்கில் இறந்துபோன ரசீத் என்பவரின் பிரேதமானது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்ததால் பிரேத விசாரணை மேற்கொள்ள மேற்படி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு காலை 8.30 மணிக்கு சென்றேன். பிரேதத்தை சாட்சிகள் அடையாளம் காட்ட பார்வையிட்டேன். பிரேதத்தின் உச்சந்தலை மற்றும் இடது நெற்றியில் இரத்த காயமும், வலது தோள் பட்டையில் , இடது கை , இடது கால் முட்டி , வலது கால் முட்டி , இடது கால் பாதம் ஆகிய இடங்களில் சிராய்பு காயம் இருந்தது . பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொள்ள அங்கு இருந்த பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளுக்கு பிரேத விசாரணை முடியும் வரை உடன் இருக்க கேட்டு சம்மன் சர்வ் செய்தேன் . பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன ரசீத் பிரேதத்தின் மீது பஞ்சாய்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் காலை 9.00 மணிக்கு பிரேத விசாரணை ஆரம்பித்து பகல் 12.00 மணிக்கு பிரேத விசாரணை முடித்தேன் . பிரேத விசாரணையின்போது உடன் இருந்த சாட்சிகள் 1) மனோகரன் 2) ஸ்ரீபிரதீஸ் 3) ஆறுமுகம் 4) கலந்தர் 5) தில்பாஷா ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் திரு. சாகு , வரதராஜ் , முத்துகிருஷ்ணன் ஆகியோர்களை மருத்துவமனையிலே வைத்து

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை **Ex.P.**19 ஆகும்.

பின்னர் இவ்வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டதில் இருந்தும் , பிரேதத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் 27.10.2021 தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் சின்ன ஓரப்பம் கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் என்வருக்கு சொந்த கிணற்றுக்கு அருகில் மிட்டப்பள்ளி கிராமத்தை சேர்ந்த ரவிகுமார் மகன் திலிப்குமார் என்பவருக்கும் ரசீதுக்கும் ஏற்பட்ட வாய் தகராறில் திலிப்குமார் , ரசீதை கிணற்றில் தள்ளியதில் ரசீதின் தலை பாகம் கிணற்றின் ஷெடின் மீது விழுந்து காயம் ஏற்பட்டு , தண்ணீல் விழுந்து , இறந்துள்ளது தெரிந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 174 கு.வி.மு.ச ல் இருந்து 302 இ.த.ச வாக பிரிவு மாற்றம் செய்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை **Ex.P.20** ஆகும். பின்னர் இவ்வழக்கின் இறந்துபோன ரசீத் பிரேதத்தினை இறப்பின் உண்மையான காரணமறிய உதவி பேராசிரியர் , சட்டம் சார்ந்த அறிவியல் பணிகள் , அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனை கிருஷ்ணகிரி அவர்களிடம் ஆஜர்ப்படுத்த கந்திகுப்பம் காவல் நிலைய முதல் நிலைய காவலர் திருமதி. மைதிலி என்பவர் வசம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன்.

பின்னர் இவ்வழக்கில் 28.10.2021 தேதி பிற்பகல் 1.00 மணிக்கு கந்திகுப்பம் காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜாமணி , திருமதி.விஜயவாணி , காவல் ஆளிநர்கள் மற்றும் சாட்சிகள் திரு . செல்வம், திரு. முருகன் ஆகியோருடன் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை கண்டுபிடிக்க

கிருஷ்ணகிரி காட்டிநாயனப்பள்ளி , சுண்டம்பட்டி , ஒரப்பம் ஆகிய இடங்களில் தேடியும் , விசாரித்து வந்தபொழுது PSV பொறியியல் கல்லூரி அருகே வந்தபொழுது தகவலாளியிடம் இருந்து கிடைத்த தகவலின் பேரில் சென்னை – கிருஷ்ணகிரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் செட்டிப்பள்ளி செல்லும் பிரிவு பாதை அருகிலுள்ள விநாயக பேக்கரி முன்பு நின்று இருந்தது பின்னர் பெயர் , விலாசம் தெரிந்த திலிப்குமார் வயது 38 , த/பெ . ரவிகுமார் என்பவரை பகல் 14.45 மணிக்கு பிடித்து விசாரிக்க குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 15.00 மணிக்கு கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் செல்வம் , முருகன் ஆகியோர் முன்னிலையில் மடிகணினியில் பதிவு செய்தேன்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் மற்றும் கைது செய்த எதிரி திலிப்குமாரின் கையெழுத்தை பெற்றேன். மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில் எதிரி திலிப்குமாரை சம்பவயிடத்திற்குதிற்கு சாட்சிகளுடன் அழைத்துச்சென்றேன். எதிரி சம்பவயிடத்தை அடையாளம் காட்டினார், பின்னர் மாலை 5.15 மணிக்கு எதிரி திலிப்குமார் மற்றும் சாட்சிகளுடன் கந்திகுப்பம் காவல் நிலையம் வந்து முறைப்படி திரேக பரிசோதனை செய்து எதிரியை பாரா காவல் வசம் ஒப்படைத்தேன் . எதிரியை கைது செய்த விவரத்தை அவர் மனைவி கலைமதி என்பவருக்கு முறைப்படி தெரிவித்தேன். 28.10.2021 தேதி பிரேத பரிசோதனைக்கு சென்ற முதல் நிலைய காவலர் 1978 திருமதி. மைதிலி அவர்கள் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தின் மீது இருந்த உடைமைகளை தனி அறிக்கை மூலம் ஆஜர்ப்படுத்தினார் அதனை படிவம் 91 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு

அனுப்பி வைத்தேன் . பின்னர் வழக்கின் எதிரி திலிப்குமாரையும் , சம்பவயிடத்தில் கைப்பற்றி வழக்கு சொத்தையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . அந்த படிவம் 91 **Ex.P.21** ஆகும். சாட்சிகள் திரு . செல்வம், திரு. முருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 01.11.2021 தேதி இவ்வழக்கின் சாட்சிகள் மனோகரன் , ஸ்ரீபிரதீஸ் , திரு. ஆறுமுகம் ஆகியோர்களிடம் 164 (5) படி வாக்குமூலம் பதிவு செய்ய கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் .1 கிருஷ்ணகிரி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் . அந்த வேண்டுகோள் கடிதம் **Ex.P.22** ஆகும். பின்னர் 17.11.2021 ம் தேதி மேற்படி வழக்கில் பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பரிசோதனை கூடதிற்கு ஆய்விற்காக அனுப்பி வைக்க குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் அந்த வேண்டுகோள் கடிதம் **EX.P.23** ஆகும். இவ்வழக்கில் 19.11.2021 தேதி மேற்படி சாட்சிகள் மனோகரன் , திரு. ஸ்ரீபிரதீஸ், திரு. ஆறுமுகம் ஆகியோர்களிடம் பிரிவு 164 கு.வி.மு.ச வாக்குமூலம் குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் .1 ஆவர்களால் பெறப்பட்டது . 30.11.2021 தேதி முதல் நிலை காவலர் 1978 திருமதி. மைதிலி என்பவர் கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களின் நீதிமன்றத்தில் அறிக்கை செய்து அவர்களின் வேண்டுகோள் கடிதத்தினை பெற்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உதவி பேராசிரியர் , சட்டம் சார்ந்த அறிவியல் பணிகள் அவர்களிடம் அறிக்கை செய்துக்கொண்டு மேற்படி வழக்கில் இறந்துபோன

ரசீதின் பிரேத பரிசோதனையின்போது சேகரித்து வைத்திருந்த உடல் உள்ளுறுப்புகள் மற்றும் மகஜர் சொத்துக்களை பெற்று தர்மபுரி உதவி இயக்குநர் வட்ட தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து வழக்கு எண் . DPI/Tox–H/1119/2021 மற்றும் DPI/Biol/394/2021 ஆகியவற்றை ஒப்புவித்து நிலையம் வந்தார்.

23.12.2021 ம் தேதி அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனை அடைந்து ரசீதின் பிரேதத்தின்மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. ராஜ்குமார் அவர்களிடம் பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றேன் . அவரிடம் பிரேத பரிசோதனை சான்றிதழிலுள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொடுக்குமாறு கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் . அதன் பேரில் 24.12.2021–ம் தேதி மேற்படி மருத்துவர் வினாக்களுக்கான பதிலை அறிக்கையாக கொடுத்தார். அந்த அறிக்கை **Ex.P.24**. பின்னர் 28.12.2021–ம் தேதி இவ்வழக்கில் இரசாயன பரிசோதனை சான்று வழங்கிய திரு.தைலப்பன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . அவரிடமிருந்து இரசாயன பரிசோதனை சான்று பெற்றேன் . பின்னர் அதே நாளில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனை சென்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு .ராஜ்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்து பிரேத பரிசோதனை சான்று மற்றும் இரசாயன பரிசோதனையின் அறிக்கையின் அடிப்படையில் இறப்பிற்கான இறுதிக் கருத்துரை பெற்றேன் . பின்னர் அதே தேதியில் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.சிவக்குமார் முதல் தகவல் அறிக்கையை விரைவு தபால் மூலம்

நீதிமன்றத்தில் ஒப்படைத்த காவலர் 1645 திரு.அசோக்குமார் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்ப்படுத்திய முதல் நிலை காவலர் 1978 திருமதி. மைதிலி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

31.12.2021–ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து கனம் ADP அவர்களின் கருத்துரை பெற்று இவ்வழக்கின் எதிரி திலிப்குமார் என்பவர் மீது 302 இதச–வின் படி இறுதி அறிக்கை தயார் செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் .1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் . 164 குவிமுச வாக்குமூலம் வீடியோ , ஆடியோ முறையில் பதிவு செய்யப்பட்டது . அதற்காக கொடுக்கப்பட்டுள்ள சிடிக்கள் இரண்டு M.O.5 வரிசை.

<u>குறுக்கு விசாரணை:</u>

இறந்து போன பிரேதத்தை நான் முதன்முதலாக எப்போது எந்த நேரத்தில் போய் பார்த்தேன் என்று சொன்னால் 28.10.2021–ம் தேதி காலை 8.30 மணிக்கு பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு முடித்ததாக நான் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் 15.00 மணிக்கு ஆரம்பித்ததாக குறிப்பிட்டுள்ளேன். 16.00 மணிக்கு அந்த வாக்குமூலத்தை முடிவு செய்தேன். இந்த விவரத்தை நான் அறுதியிட்டு சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கையின் 2–வது பக்கத்தில் முதல் வரியில் 27.10.2021–ம் தேதி 17.30 மணிக்கு புகார் பெறப்பட்டதாக உள்ளது என்று சொன்னால் சரிதான் . காவல் உதவியாய்வாளர் நேரத்தை தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு

தவறுதலாக குறிப்பிட்டுள்ளது குறித்து உதவி ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று சொன்னால் அவ்வாறு வாக்குமூலம் அது குறித்து பதிவு செய்யவில்லை . புகாரில் குறிப்பிட்டு எந்த நபர் பேரும் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 27.10.2021–அன்றைய தேதியில் நானோ என் காவல் எல்லைக்குட்பட்ட காவல் துறையினர் யாரும் சம்பவஇடத்திற்கு போகவில்லை என்று சொன்னால் புகார் வாங்குவதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு போகவில்லை . அ.சா.1 தன் சாட்சியத்தில் , தீயணைப்புத் துறையினர் பிரேதத்தை கிணற்றிலிருந்து எடுத்ததாக சொல்லி உள்ளார்கள் என்றும், அவ்வாறு இருக்கையில் தீயணைப்பு துறையினரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான் . சம்பவ இடத்திலிருந்து பிரேதத்தை மருத்துவமனைக்கு யார் மூலம் எந்த வாகனத்தில் பிரேதம் எடுத்து செல்லப்ட்டது என்பது குறித்து நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் தனியார் வாகனத்தில் பிரேதம் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

அந்த தனியார் வாகனம் அதன் பதிவு எண் , அதன் உரிமையாளர் என்பது குறித்து என் விசாரணையில் தெரிய வரவில்லை என்று சொன்னால் என் விசாரணையில் தெரிய வந்தது . அவர்கள் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தினால் அவர் சாட்சியாக விசாரிக்கவில்லை . அவ்வாறு சாட்சி சொல்ல முன்வராத காரணத்தினால் அவர்களை சாட்சியாக போட முடியவில்லை என்று சொல்லும் விவரங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன ரஷீத் –ன் உடல் சம்பவ இடத்தில்

இருந்து எப்படி மருத்துவமனைக்கு வந்தது என்ற விவரங்கள் குறித்து இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் இறுதி அறிக்கையில் அந்த விவரம் சொல்லப்படவில்லை என்பது சரிதான். இறந்து போனவரின் உடல் காவல் துறை அனுமதியின்றி ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது என்று சொன்னால் இந்த வழக்கில் பிரேதத்தை அனுப்பி வைத்தவர் அந்த கிராமத்தின் நிர்வாக அலுவலர். அந்த இடத்தில் பிரேதம்இருந்ததால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று கருதி கிராம நிர்வாக அலுவலர் பிரேதத்தை மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளார். . மேற்படி சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று அ .சா.1 என் விசாரணையில் சொல்லி உள்ளாரா என்று சொன்னால் அதனை அறுதியிட்டு வாக்குமூலம் சொல்லவில்லை . அந்த கிணறு எவ்வளவு ஆழம் எவ்வளவு ஆழத்திற்கு தண்ணீர் இருந்தது என்ற விவரத்தை என் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்று சொன்னால் ஆழம் பற்றி இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை . மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் தெரிவித்துள்ளேன் . கிணற்றில் தண்ணீர் இருந்ததா என்பதைக் குறித்தும் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்று சொன்னால் தண்ணீரில் விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக இறுதி அறிக்கையில் சொல்லி உள்ளேன்.

எத்தனை அடியில் தண்ணீர் இருந்தது எத்தனை அடி காலியாக இருந்தது என்ற விவரத்தை நான் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்று சொன்னால் அந்த விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை . சட்டப்பிரிவு மாற்று அறிக்கை 28.10.2021 பகல் 1.00 மணிக்கு தயார்

செய்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் பகல் 12.00 மணிக்கு தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். சம்பவ சமயத்தில் நான்கு நபர்கள் அந்த இடத்தில் இருந்ததாக சொல்லி உள்ளேன் என்றும் , அவர்கள் நண்பர்களாக உள்ள பட்சத்தில் அவர்களுடைய CDR Details எதுவும் நான் இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் . சாட்சிகள் அங்கிருந்ததாக ஒப்புக்கொண்டதால் அதை நிரூபிக்க CDR வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை . இறந்து போன நபருக்கும் எதிரிக்கும் சம்பவத்திற்கு முன்பாக ஏதேனும் முன்விரோதம் இல்லை என்பது குறித்து என் விசாரணையில் தெரிய வந்ததா என்று சொன்னால் சம்பவத்திற்கு முன்பு வாய்த்தகராறு ஏற்பட்டதாக தெரியவந்தது . அதற்கு முன்பு முன்விரோதம் இருந்ததாக தெரிய வரவில்லை. கிணற்றின் உரிமையாளராக சொல்லப்படும் ஆறுமுகம் என்பவரிடமிருந்து அந்த இடத்திற்கான வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்ட்டுள்ளதா என்று சொன்னால் தனியாக ஆவணங்கள் ஏதும் ஆறுமுகத்திடம் இருந்து பெறப்படவில்லை. இறந்து போன நபரை நேரடியாக பார்க்கமல் சந்தேகத்தின் அடிப்படையில் சந்தேக மரணம் என்று இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

28.10.2021–ம் தேதி மனோகரன் , ஸ்ரீபிரதீஷ், ஆறுமுகம் ஆகியோர்களை எத்தனை மணிக்கு நான் விசாரித்தேன் என்று சொன்னால் காலை 9.00 மணிக்கு விசாரித்தேன். பிரேத விசாரணையின் போது அந்த சாட்சிகளை விசாரித்தேன். நான் மேற்படி சாட்சிகளை காவல் நிலையத்தில்

தான் விசாரணை மேற்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரையும் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரணை மேற்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல . பார்வை மகஜர் வழக்கின் மற்ற ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல . அ.சா–1 செல்வத்தை நான் 28.10.2021–ம் தேதி எதிரி திலிப்குமாரை நீதிமன்றகாவலுக்கு அனுப்பிய பிறகு இரவு சுமார் 7.00 மணிக்கு மேல் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் எதிரி திலிப்குமார் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலம் சட்டத்திற்கு புறம்பாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்று சொன்னால் வழக்குக்கு தேவையான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இறந்து போன நபர் சம்பவத்திற்கு முன்பாக அதிக மது போதையில் இருந்தார் என்று என் விசாரணையில் தெரிய வந்தது என்று சொன்னால் சாட்சிகள் யாரும் அவ்வாறு சொல்லவில்லை . இருப்பினும், இரசாயன பரிசோதனை அறிக்கையில் உடல் உள்ளுறுப்புகளில் எத்தில் ஆல்கஹால் இருந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு . எதிரிக்கும்இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் தவறு. ஒரு பொய்யான இறுதி

அறிக்கையை எதிரி மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் தவறு.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.11 10:01:21 +0530